பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

28 10 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

- தேசிய நெடுஞ்சாலைகள் அமைப்பதில் 80 லட்சம் டன் கழிவுப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

- நடப்பாண்டு ரபி பருவத்திற்கான பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுக்கான மானியத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

- Montha புயல், காக்கிநாடா அருகே மச்சிலிப்பட்டினம் – கலிங்கப்பட்டினம் இடையே இன்றிரவு கரையை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் Kushi Chand, Anshika உட்பட ஐந்து பேர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை குறைப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் நடைபெற்றுவரும் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், சூரியசக்தி மின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், மத்திய அரசு மேற்கொண்டுவரும் அனைத்து நடவடிக்கைகளையும் அவர் பட்டியலிட்டார்.

நாட்டின் எரிசக்தி மற்றும் மனித வாழ்விற்கு சூரியசக்தி ஆதாரமாக திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

பூமியை சுத்தமாகவும், பசுமையாகவும் பராமரிப்பதற்கு சூரிய மின்சக்தி பயன்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

குறைந்த செலவில் சூரிய மின்சக்தியை வழங்குவதன் மூலம் தூய்மையான எரிசக்தியை உறுதி செய்வதுடன், உள்ளூர் பொருளாதார வளர்ச்சிக்கும் உத்வேகம் அளித்திடும் என்று அவர் கூறினார்.

பெண்கள் தலைமையிலான சூரியசக்தி மின் உற்பத்தி நடவடிக்கைகள் கார்பன் வெளியேற்றத்தை குறைக்க உதவுவதுடன் பாலின சமத்துவத்தையும் உறுதி செய்யும் என்று அவர் குறிப்பிட்டார்

காற்றாலை மின் உற்பத்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தித் திறனில் இந்தியா உலக அளவில் நான்காவது இடத்தில் உள்ளதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<>>>>>

சூரியசக்தி மின் உற்பத்தியில் உலக அளவில் இந்தியா மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், புதை படிவ எரிபொருளின் இறக்குமதியை குறைப்பதற்கும், மாசு கட்டுப்பாட்டிற்கான செலவுகளை குறைப்பதற்கு உதவிடும் என்று தெரிவித்தார்.

மொத்த சூரியசக்தி மின் உற்பத்தில் 41 சதவீதம் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பில் உறுப்பினர்களாக அங்கம் வகிக்கும் நாடுகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

நீடித்த சுதந்திரமான குறைந்த செலவிலான சூரியசக்தி மின் உற்பத்திக்கான பணிகளில் சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாக திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<>>>>>

தேசிய நெடுஞ்சாலைகள் அமைப்பதில் 80 லட்சம் டன் கழிவுப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், உயிரி எரிபொருட்களுக்கான எத்தனால் மற்றும் மெத்தனால் பயன்பாடு, போக்குவரத்துத்துறையின் செலவுகளை வெகுவாக குறைக்க உதவியுள்ளது என்று கூறினார்.

சரக்கு போக்குவரத்துக்கான செலவுகளை வரும் டிசம்பர் மாதத்திற்குள் ஒற்றை இலக்கமாக குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சரக்கு போக்குவரத்துக்கான செலவுகளை குறைப்பதன் மூலம், வர்த்தகம் அதிகரிப்பதுடன், தனிநபர் வருவாய் உயரும் என்று அவர் கூறினார்.

மாற்று உயிரி எரிபொருட்களை பயன்படுத்துவதன் மூலம், காற்று மாசு அளவு குறைவதுடன், வேளாண் விளைப்பொருட்களின் தேவை அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

சிறந்த உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நீடித்த சாலை மேம்பாடு ஆகியவை நாட்டின் பொருளாதாரத்தை ஐந்து ட்ரில்லியன் டாலர் அளவுக்கு உயர்த்த உதவிடும் என்று திரு நிதின் கட்கரி தெரிவித்தார்.

<<<<<>>>>>

நடப்பாண்டு ரபி பருவத்திற்கான பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் உரங்களுக்கான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், 37 ஆயிரத்து தொள்ளாயிரத்து 52 கோடி ரூபாய் அளவிலான மானியத் தொகைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உரங்கள் குறைந்த விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உரங்களுக்கு சர்வதேச அளவிலான விலை நிலவரப்படி உரிய முடிவுகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு சேவைகள் துறை உந்துசக்தியாக திகழ்கிறது என்று நித்தி ஆயோக் தலைமை செயலதிகாரி திரு. B.V.R. Subramaniam கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய சேவைகள் துறை தொடர்பான இரண்டு அறிக்கைகளை அவர் வெளியிட்டுப் பேசினார்.

முதலாவது அறிக்கை மொத்த மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளின் பங்களிப்பை விரிவாக எடுத்துரைப்பதாகவும், இரண்டாவது அறிக்கை கல்வி, தொழில், பாலினம் மற்றும் பிராந்திய அடிப்படையில் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை கருத்தில்கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சேவைகள் துறையில் உள்ள வாய்ப்புகளை மாநில அரசுகள் மற்றும் தொழில்துறையினர் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நித்தி ஆயோக் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

Montha புயல், தீவிர புயலாக வலுவடைந்து மணிக்கு 15 கிலோமீட்டர் வேகத்தில் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து வருவதாகவும், இது ஆந்திர மாநிலம் காக்கிநாடா அருகே இன்றிரவு கரையை கடக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் தற்போது மச்சிலிப்பட்டினத்தில் இருந்து 60 கிலோமீட்டர் தொலைவிலும், காக்கிநாடாவிலிருந்து 140 கிலோமீட்டர் தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்த புயல் கரையை கடக்கும்போது மணிக்கு 90 முதல் 110 கிலோமீட்டர் வேகத்தில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனையடுத்து, ஆந்திர மாநிலத்தில் உள்ள 19 கடலோர மாவட்டங்களுக்கு அதிகனமழைக்கான எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

புயலால் பாதிக்கப்படும் கடலோரப்பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புக்குழுக்கள் அப்பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

புயலால் பாதிக்கப்படும் இடங்களில் தொற்றுநோய்கள் பரவாதவாறு தேவையான மருத்துவ உதவிகளை வழங்க மருத்துவக்குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், மீட்பு நடவடிக்கைகளை மாநில அரசு உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

அமராவதியில் அமைக்கப்பட்டுள்ள நேரடி கண்காணிப்பு மையத்தில் இருந்து அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு மற்றும் துணை முதலமைச்சர் திரு பவன் கல்யாண் ஆகியோர் ஆய்வு செய்து வருகின்றனர்.

கனமழை காரணமாக கோனசீமா, பிரகாசம், நந்தியால், கடப்பா மற்றும் கிழக்கு கோதாவரி மாவட்டங்களில் 43 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, புயல் மற்றும் கனமழை காரணமாக, பல்வேறு ரயில்களின் நேரம் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாகவும், சில ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியின் குத்துச்சண்டை பிரிவில் இந்தியாவின் Kushi Chand, Anshika உட்பட ஐந்து பேர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்

பக்ரைனில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் Kushi Chand-ம், 80 கிலோ எடைப்பிரிவில் Anshika-வும், 54 கிலோ எடைப்பிரிவில் Pujari Chandrika-வும், 66 கிலோ எடைப்பிரிவில் Harnoor Kaur-ம் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

ஆடவர் 50 கிலோ எடைப்பிரிவில் Moibungkhongbam Lanchenba Singh-கும் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் Syndrella – Arya Sarthak இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதி சுற்றில் இந்த இணை 11-13, 11-5, 12-10, 11-13, 11-9 என்ற செட் கணக்கில், கொரிய இணையை வென்றது.

<<<<<>>>>>

மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் ஸ்மிருதி மந்தனா முதலிடத்தை பிடித்துள்ளார்.

<<<<<>>>>>

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 7-5, 6-3 என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் Jirat Navasirisomboon-ஐ வென்றார்.

<<<<<END>>>>>